# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

பதிப்பாசிரியர்கள்
**சி. மைக்கேல் சரோஜினி பாய்**
**ப. பத்மநாப பிள்ளை**
**வ. இராசரத்தினம்**

வளர் தமிழ் ஆய்வு மன்றம்
திண்டுக்கல்
**2017**

**ISBN NO : 978-81-920884-6-4**

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு (கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி. மைக்கேல் சரோஜினி பாய்<br>ப. பத்மநாப பிள்ளை<br>வ. இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2017 |
| தாள் | : | 18.6 மேப் லித்தோ |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | அகராதி 10 புள்ளி |
| பக்கம் | : | x + 320 |
| விலை | : | ரூபாய் 500/- |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001<br>தமிழ்நாடு<br>தொ.பே. 0451-2427458 |

| | | |
|---|---|---|
| 101. | ஆ. மெர்சி ஆஞ்சலா<br>சூஃபர் அடிகளின் நல்லொழுக்கச் சிந்தனைகள் | 126 |
| 102. | சி. மைக்கேல் சரோஜினி பாய்<br>தழை ஆடை - ஒரு பெண்ணியப் பார்வை | 130 |
| 103. | சி. யசோதா<br>நடையியல் நோக்கில் பாரதியார் கவிதைகள் | 135 |
| 104. | தி. யோகேஸ்வரன்<br>இறை நிலையும் தமிழின் சிறப்பும் | 140 |
| 105. | ம. ரமூலா ரூபி<br>திருக்குறளில் விழுமியங்கள் | 145 |
| 106. | மு. ராதிகா<br>பழந்தமிழர்களின் வழிபாட்டு முறைகள் | 150 |
| 107. | நா. ராஜலட்சுமி<br>கிருஷ்ணதாசி புதினம் காட்டும் தேவதாசி முறை | 153 |
| 108. | சி. ராஜலெட்சுமி<br>பெரிய புராணத்தில் சமயப் பூசல்கள் | 157 |
| 109. | செ. ராஜேஷ் கண்ணா<br>தற்கால புதுக்கவிதைகளில் உவமைகளின் வளர்ச்சி | 162 |
| 110. | நா. ரேணுகா<br>தமிழ்ப் பதிப்புலகில் மர்ரே. எஸ். ராஜம் | 166 |
| 111. | மா. லட்சுமிபிரியா<br>படைப்பாளர்களும் ஐக்கூவும் | 170 |
| 112. | பா. லயோலா ஜூலியட் மேரி<br>பற்றற்றோர் | 174 |
| 113. | ப. லாவண்யா<br>நீர்கொத்தி புதினம் காட்டும் தண்ணீர் பிரச்சினை | 179 |
| 114. | ரா. லிஜி<br>பழந்தமிழர் உணவுகள் | 183 |

# தமிழ்ப் பதிப்புலகில் மர்ரே. எஸ். ராஜம்

தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் புதிய மாற்றத்தை முன்னெடுத்து நூற்பரவலை முன்னிலைபடுத்தியவர் மர்ரே எஸ். ராஜம் எனில் மிகையில்லை. குறுகிய காலத்தில் அருந்தமிழ் நூல்கள் பலவற்றை மலிவு விலையில் அச்சிட்டு வழங்கியவர். தாம் ஈட்டிய செல்வத்தை அறப்பணியிலும் தமிழ்ப்பணியிலும் செலவிட எண்ணி அறக்கட்டளைகளை நிறுவினார். தமிழ்ப பணி ஆற்றுவதற்காக 'சாந்தி சாதனா' என்ற அறக்கட்டளையை 1960இல் தொடங்கினார்.

பெ.ந.அப்புஸ்வாமி வழியாக ச.வையாபுரிப்பிள்ளையின் அறிமுகம் ராஜம் அவர்களுக்குக் கிடைத்தது. 1940இல் தொடங்கிய இந்நட்பு ராஜம் வாழ்க்கையைத் தமிழ் இலக்கியத்தின் பக்கம் திருப்பியது. பக்தி இலக்கியத்தையும் சங்க இலக்கியத்தையும் தொல்காப்பியத்தையும் பதிப் பித்து வெளியிடத் தூண்டியது. எஸ். ராஜம் பதிப்பாக இந்நூல்கள் வெளிவர முதற்காரணமாய் இருந்தவர் பதிப்புலகின் முன்னோடிகளுள் ஒருவரான வையாபுரிப்பிள்ளை ஆவார்.

மர்ரே பதிப்பின் முதல் பதிப்பாக நாலாயிர திவ்வியப் பிரபந்தம் வெளிவந்தது. வையாபுரிப்பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை 1955இல் வெளியிட்டது. சுவடிகளை ஒப்பிட்டு மூல பாடத்தைச் செப்பம் செய்து சீர் பிரித்து, சந்தி பிரித்து, காற்புள்ளி முதலான நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்தி வெளியிட்டது. பாடவேறு பாடுகள், பொருள் அடைவு, நூற்பா முதற்குறிப்பு அகராதி முதலியன கொடுக்கப பட்டுள்ளன. இதற்கு முன்னர் வந்த பதிப்பு நூல்கள் சுவடிகளில் உள்ள மூலபாடத்தை அப்படியே பதிப்பித்து வந்தனர். சந்தி பிரித்து பதிப்பிக்கும் முறையை எந்தப் பதிப்பாசிரியரும் செய்ததில்லை. இச்சூழலில் சந்தி பிரித்து எல்லோரும் எளிதில் பொருள் புரிந்து கொள்ளும் வகையில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்தவர் எஸ்.ராஜம் ஆவார். இப்பதிப்பைக் கண்ட பழம் பதிப்பாசிரியர்களுள் ஒரு சாரார் கண்டனம் தெரிவித்தனர். விமர்சனங்களை முன் வைத்தனர். மற்றொரு சாரார் வரவேற்றனர். இம் முயற்சியை, "இது தமிழ் நூல் அச்சின் சரித்திரத்தில் ஒரு பெரிய புரட்சி" என்று மு.அருணாசலம் குறிப்பிடுகிறார். இப்பதிப்பிற்குப் பின் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் சந்தி பிரித்துப் பதிப்பிக்கும் போக்கு வளர்ந்தது.

மர்ரே பதிப்புப்பணி 1955இல் தொடங்கி 1961 வரை தொடர்ந்தது. இக்குறுகிய காலத்தில் 40 தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களைப் பதிப்

---

**முனைவர் நா.ரேணுகா**
பாத்திமா கல்லூரி, மதுரை.